**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| THE COURT OF | : | II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR. |
| Case No | : | SC 73/2020 |
| Prosecution Witness | : | PW 13 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சந்திரகாசன் | Caste | : | |
| Father's Name | : | பொன்னுசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 62 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 01.12.2023**

***எதிரிகள் 1, 2, 6, 9, 11 வருகை***
***எதிரி 3, 4, 5, 7, 8, 10 வருகை இல்லை குவிமுச பிரிவு 317 கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை :–**

நான் மணலூர் சாஸ்திரி நகரில் குடியிருக்கிறேன். நான் விவசாய கூலி வேலை பார்க்கிறேன். அ.சா.12 ஐ தெரியும். என்னிடம் காட்டப்படும் கையெழுத்துக்கள் நான் போட்டவைதான். எதிரிகள் அந்த ஊர்காரர்களா என்பதற்காக அந்த கையெழுத்துக்களை போட்டேன்.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

14.06.2019 காலை 9 1/2 லிருந்து 10 மணிக்குள் ஈச்சங்குடி காளியம்மன் கோவில் தெருவில் போலிஸார் இரும்பு பைப்பை கைபற்றினார்கள் என்றும், 14.06.2019 மதியம் 12 மணிக்கு திருவையாறு மெர்சியா நகர் பாரதியின் மாமனார் வீட்டு முன்பு இண்டிகா காரை போலிஸார் என் முன்னிலையில் கைபற்றினார்கள் என்றும், சொன்னால் சரியல்ல. 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.8**. 2வது எதிரி சுரேந்திரனின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.9.** 3வது எதிரி தினேஷின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.10**. 7வது எதிரி பாரதியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.11**. 14.06.2019 ஆம் தேதியன்று காலை 10 மணிக்கு தயாரிக்கப்பட்ட கைபற்றுதல் மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான் அது **அ.சா.ஆ.12**. 12 மணிக்கு தயாரிக்கப்பட்ட கைபற்றுதல் மகசரில் உள்ள என்னுடைய கையொப்பம் **அ.சா.ஆ.13**.

**1 முதல் 11 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

திருவையாறு காவல்நிலையத்தில் வைத்து என்னிடம் காட்டப்படும் கையொப்பங்களை போட்டேன். காவல்நிலையத்திற்கு இரவு 7 மணிக்கு சென்றேன். இரவு 9 மணிவரை இருந்தேன். எதில் அந்த கையெழுத்துக்களை போட்டேன் என்று எனக்கு தெரியாது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/– A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.